# அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்,

திருவல்லிக்கேணி , சென்னை – 600 005.

<u>தொலைபேசி எண். 044–2844 2462 / 2844 2449</u>

## <u>அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி வேலைவாய்ப்பு</u>
## <u>விண்ணப்ப படிவம்</u>

<u>விண்ணப்பதாரரின்</u>
<u>புகைப்படம்</u>
<u>சான்றொப்பத்துடன்</u>

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் | |
| 2. | மனுதாரரின் பெயர் | |
| 3. | தந்தை / காப்பாளர் பெயர் | |
| 4. | நிரந்தர முகவரி | |
| 5. | மதம் | |
| 6. | பிறந்த தேதி மற்றும் வயது (பள்ளி சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 7. | கல்வித் தகுதி (நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிக்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | |
| 8. | ஏற்கனவே பணிபுரிந்த முன் அனுபவம் இருப்பின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். | |
| 9. | நன்னடத்தைச் சான்று (அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து) | |
| 10. | மருத்துவ சான்றிதழ் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | |
| 11. | காவல்துறை சான்றிதழ் (சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்) | |
| 12. | தொலைபேசி எண். | |
| 13. | மின்னஞ்சல் முகவரி | |

மேலே கூறப்பட்ட வரிசை எண்.01 முதல் 13 வரையிலான விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என்றும், நான் இந்து மதத்தைச் சார்ந்தவர் என்றும் இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : விண்ணப்பதாரரின் கையொப்பம்

# தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில்,

திருவல்லிக்கேணி , சென்னை–5.

**தொலைபேசி எண். 044–2844 2462, 2844 2449**

**ந.க.எண்.376/2021/அ8 நாள் : 22.12.2021**

சென்னை–5, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில் வைணவ அர்ச்சகர்களுக்கான பயிற்சிப் பள்ளியில் உள்ள கீழ்க்காணும் பணியிடங்களுக்கு இந்து மதத்தைச் சார்ந்த தகுதியானவர்களை நேர்காணல் மூலம் தேர்வு செய்து இந்து சமய அறநிலைய சட்ட விதிகளுக்கு உட்பட்டும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டும் பணி நியமனம் செய்ய 24.01.2022 மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**பணியிடம் விபரம்**

| வ. எண். | பணியிடம் | தொகுப்பூதியம் (மாதம் ஒன்றுக்கு) | பணியிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தலைமை ஆசிரியர் | ரூ.35,000/– தொகுப்பூதியம் | 01 (ஒன்று) |
| 2. | ஆகம ஆசிரியர் | ரூ.30,000/– தொகுப்பூதியம் | 01 (ஒன்று) |
| 3. | சமையலர் | ரூ.12,000/– தொகுப்பூதியம் | 01 (ஒன்று) |
| 4. | சமையல் உதவியாளர் | ரூ.10,000/– தொகுப்பூதியம் | 01 (ஒன்று) |
| 5. | எழுத்தர் | ரூ.10,000/– தொகுப்பூதியம் | 01 (ஒன்று) |

திருக்கோயிலால் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி மட்டுமே உரிய சான்றிதழ் நகல்களுடன் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். துணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை–5. விண்ணப்பப் படிவம் மற்றும் நிபந்தனைகளை **hrce.tn.gov.in** என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பணியிட விபரங்களுக்கான கல்வித் தகுதி, வயது வரம்பு, நிபந்தனைகள் மற்றும் இதர விபரங்களை அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டும் தெரிந்து கொள்ளலாம்.

**தலைமை ஆசிரியர் பணியிடத்திற்கான தகுதிகள்**

1. தமிழில் முதுநிலைப் பட்டமும், பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பட்டமும் பெற்றிருத்தல் வேண்டும்.
2. இந்து சமய இலக்கியங்களிலும், தமிழக திருக்கோயில்கள் வரலாற்றிலும் போதிய கற்றறிவு இருத்தல் வேண்டும்.
3. பல்கலைக் கழகம், கல்லூரி மேல்நிலைப் பள்ளி ஏதேனும் ஒன்றில் தமிழாசிரியராக குறைந்தபட்சம் ஐந்து ஆண்டு காலம் பணியாற்றிய அனுபவம் தேவை.

**குறிப்பு**

தலைமை ஆசிரியர் விண்ணப்பதாரர் 01.07.2021 அன்று 35 வயது நிரம்பாதவராக இருத்தல் வேண்டும். 35 வயது நிரம்பியவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் 35 வயதுக்கு உட்பட்ட விண்ணப்பதாரர்கள் யாரும் விண்ணப்பிக்கவில்லை என்றாலோ அல்லது தகுதியான நபர்கள் இல்லை என்றாலோ 35 வயதைக் கடந்த விண்ணப்பதாரர்கள் பரிசீலிக்கப்படுவர்.

## ஆகம ஆசிரியர் பணியிடத்திற்கான தகுதிகள்

1. ஏதேனும் வேத ஆகம பாட சாலையில் (வைணவம்) ஐந்தாண்டுகளுக்குக் குறையாமல் ஆசிரியராகப் பணிபுரிந்த அனுபவம் பெற்றிருக்க வேண்டும் அல்லது இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏதேனும் ஒரு கோயிலில் ஐந்தாண்டு கால அளவிற்கு குறையாமல் முதுநிலை அர்ச்சகராக பணிபுரிந்திருக்க வேண்டும்.
2. வைணவ ஆகமத்தில் தற்போதுள்ள வேத, ஆகம பாடசாலையில் நான்கு ஆண்டு பாடப்பிரிவில் சான்றிதழ் படிப்பை முடித்திருக்க வேண்டும்.

### குறிப்பு

ஆகம ஆசிரியர் விண்ணப்பதாரர் 01.07.2021 அன்று 35 வயது நிரம்பாதவராக இருத்தல் வேண்டும். 35 வயது நிரம்பியவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் 35 வயதுக்கு உட்பட்ட விண்ணப்பதாரர்கள் யாரும் விண்ணப்பிக்கவில்லை என்றாலோ அல்லது தகுதியான நபர்கள் இல்லை என்றாலோ 35 வயதைக் கடந்த விண்ணப்பதாரர்கள் பரிசீலிக்கப்படுவர்.

## சமையலர் பணியிடத்திற்கான தகுதிகள்

1. தமிழில் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும், மற்றும்
2. 50 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு உணவு தயாரிப்பதில் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
3. 01.07.2021 அன்று வயது 18 முதல் 35க்குள் இருக்க வேண்டும்.

## சமையல் உதவியாளர் பணியிடத்திற்கான தகுதிகள்

1. தமிழில் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும், மற்றும்
2. உணவு தயாரிக்க தெரிந்திருக்க வேண்டும்.
3. 01.07.2021 அன்று வயது 18 முதல் 35க்குள் இருக்க வேண்டும்.

## எழுத்தர் பணியிடத்திற்கான தகுதிகள்

1. 10ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.
2. தமிழில் எழுதவும், படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.
3. 01.07.2021 அன்று வயது 18 முதல் 35க்குள் இருக்க வேண்டும்.

## பொதுவான தகுதிகள்

1. விண்ணப்பதாரர் இந்து சமயத்தை சேர்ந்தவராகவும், பின்பற்றுபவராகவும் இருக்க வேண்டும்.
2. வயது வரம்பை பொறுத்தவரை அரசால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளின்படி பரிசீலிக்கப்படும்.
3. திருக்கோயில் ஆகம விதிகளுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பவராக இருத்தல் வேண்டும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 22.01.2022 மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
5. இத்திருக்கோயில் பழக்கவழக்கங்களை நன்கு அறிந்திருக்க வேண்டும்.
6. நன்கு ஆரோக்கியமான உடல் நிலையுடன், தீய பழக்கவழக்கங்கள் மற்றும் தொற்று நோயற்றவர் என்றும், நல்ல மனநிலை உடையவர் என்பதற்கான விபரங்கள் குறிப்பிட்டு மருத்துவச் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
7. திருக்கோயில் நிர்வாகத்தால் பிரசுரம் செய்யப்பட்ட மாதிரி விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து அதில் மட்டுமே பூர்த்தி செய்து புகைப்படத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

8. ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியே விண்ணப்பிக்க வேண்டும்.
9. இணைக்கப்படும் சான்றுகளில் சான்றொப்பம் (Attested Xerox copies only) பெற்று அனுப்பப்பட வேண்டும்.
10. விண்ணப்பதாரர்களால் வழங்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளில் உண்மைத்தன்மை குறித்து பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.
11. விண்ணப்பதாரர் வசிக்கும் எல்லைக்குட்பட்ட காவல்நிலையத்தில் விண்ணப்பதாரர் மீது எவ்வித குற்றவியல் நடவடிக்கை ஏதுமில்லை என்ற சான்றிதழ் பெற்று இணைக்கப்பட வேண்டும். மேற்படி சான்று அறிவிப்பு தேதிக்கு பின் பெற்றிருக்க வேண்டும்.
12. நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் வரும் விண்ணப்பங்களை மட்டுமே பரிசீலித்து தகுதியான நபர்களுக்கு மட்டுமே நேர்காணலுக்கு அழைப்பு அனுப்பப்படும். நேர்காணலுக்கு விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட நாளில் / நேரத்தில் தனது சொந்த செலவில் / பொறுப்பில் அனைத்து அசல் சான்றுகளுடன் ஆஜராக வேண்டும். எவ்வித காலதாமதமோ / காரணங்களோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டது.
13. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளுடன், அஞ்சல் உறையில் வரிசை எண் மற்றும் "……………………………… பணியிடத்திற்கான விண்ணப்பம்" என தெளிவாக குறிப்பிட்டு துணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை–5 என்ற முகவரிக்கு நேரிலோ / அஞ்சல் மூலமாகவோ அனுப்ப வேண்டும். மேலும் ரூ.25/– மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டிய சுயவிலாசமிட்ட ஒப்புகை அட்டையுடன் கூடிய அஞ்சல் உறையுடனும் இணைத்து அனுப்ப வேண்டும்.
14. நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பெறப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். மேலும், தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.
15. விண்ணப்பப் படிவத்தில் விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்படாமலும், கேட்கப்பட்ட சான்றுகள் இணைக்கப்டாமலும் பெறப்படும் விண்ணப்பங்கள் ஆரம்ப நிலையிலேயே நிராகரிக்கப்படும்.
16. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர்கள், குற்ற நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள், ஜாமீனில் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், திருக்கோயில் குத்தகைதாரர்கள் மற்றும் வாடகைதாரர்கள் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து விலக்கப்பட்டவர்கள், தீர்ப்புக் கடனாளிகள் ஆகியோர் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்.
17. விண்ணப்பதாரர் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டவிதிகளுக்கு உட்பட்டும், திருக்கோயிலில் தொன்றுதொட்டு கடைபிடிக்கப்படும் பழக்கவழக்கங்கள், நடைமுறைகள் மற்றும் திருக்கோயில் நிர்வாகத்தினரால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு பணிபுரிய கடமைப்பட்டவர் ஆவார்.
18. விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதி அளிக்க வேண்டும். தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்பட்டது நிர்வாகத்தின் கவனத்திற்கு வருமேயானால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்தும், சட்டரீதியான நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.
19. இந்த பணி நியமன நடவடிக்கை அனைத்தும் அரசால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கும் அவ்வப்போது நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கும் நீதிமன்ற உத்தரவுகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.
20. கூடுதல் விபரங்கள் தேவையெனில் அலுவலக வேலை நேரங்களில் அலுவலகம் வந்த தெரிந்து கொள்ளலாம்.

*திருக்கோயில் நிர்வாகம்*